



To

BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



# செபமாலைத் திருநாள்

அக்டோபர் 08

மலர் 21 அக்டோபர் 2025 இதழ் 10


## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 02.10.2025 | Thursday | 9.30 pm | Medical Camp Inauguration | Kadamalaikuntu |
| | | 10.30 am | Aided School Teachers Protest | Nagercoil |
| | | 4.00 pm | Deaddiction Rally - UCC | Kaliyakkavilai |
| | | 6.30 pm | Homily - Guardian Angels Church | Melpuram |
| 04.10.2025 | Saturday | 6.30 am | Feast Mass - DM Provincial House | Marthandam |
| 05.10.2025 | Sunday | 4.00 pm | Feast Mass | Pushpagiri |
| | | 6.30 pm | Executive UCC Meet | Bishop's House |
| 10.10.2025 | Friday | 6.30 pm | Commemoration Mass of Archbishop Benedict Mar Gregorios | Pattom |
| 12.10.2025 | Sunday | 10.00 am | Feast Mass | Chempakatharisu |
| | | 2.00 pm | Catechism Executive Meeting | Bishop's House |
| 15.10.2025 | Wednesday | 3.00 pm | Bank Board Meeing | Bishop's House |
| 17.10.2025 | Friday | 3.00 pm | School Day | Pushpagiri |
| 18.10.2025 | Saturday | 9.00 am | Shalom Home | Kidarakuzhi |
| | | 10.00 am | MIDS | Kazhuvanthittai |
| | | 5.00 pm | Hesed Meet | Mariagiri |
| 19.10.2025 - 23.10.2025 | Sunday - Thursday | | Annual Retreat to Priests of Sivagangai Diocese | Madurai |
| 24.10.2025 | Friday | 6.30 am | Holy Mass and Talk to Decons | Catholicate Centre |
| | | 10.30 am | School Day | MJKM Christurajapuram |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 22 அக்டோபர் 2025 இதழ். 10

மலர். 22 செப்டம்பர் 2025 இதழ். 9


***Patron***
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

***Editor***
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

***Cover Design***
*Mrs. Uni Kumari B.*

***Printing***
*Santhom Press,*
*Marthandam*

***Published By***
*The Chancellor*
*Diocese of Marthandam*



**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com




# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam




**முக்கியமான நாட்கள்**

அக்டோபர் 2025

மலர்.22 அக்டோபர் 2025 இதழ்.10

| | |
|---|---|
| 01 | சர்வதேச முதியோர் தினம் |
| 02 | காந்தி ஜெயந்தி |
| 05 | உலக ஆசிரியர் தினம் |
| 08 | இந்திய விமானப்படை தினம் |
| 09 | உலக அஞ்சல் தினம் |
| 11 | சர்வதேச பெண் குழந்தைகள் தினம் |
| 15 | உலக மாணவர்கள் தினம் |
| 16 | உலக உணவு தினம் |
| 17 | சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் |
| 24 | ஐக்கிய நாடுகள் தினம் |

## உள்ளடக்கம்


1. Circular 03
2. 95-வது மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும் சபை சங்கமமும் 09
3. மறைபரப்பு தளச் செய்திகள் 09
4. குருமட செய்திகள் 10
5. மேரி மக்கள் துறவற சபை 11
6. MIDS 12
7. புனித வின்செண்ட் தே பவுல் சபை 15
8. திருமண ஆயத்தப்பயிற்சி 15
9. Health for One Million (Hom) 16
10. பெயர்விழா நல்வாழ்த்துக்கள் 16
11. மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி, கிராத்தூர் 17
12. கொமித்சியச் செய்திகள் 18
13. MCA 20
14. மறைவட்ட செய்திகள் 22
15. ஆயரின் செப்டம்பர் மாத நிகழ்வுகள் 25
16. இம்மாதம் நினைவு கூர 27
17. Bishop's Diary 28



*Printed by*

Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852




# THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH


MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum - 695 004


Prot. No. CCL 2/2025 10.09.2025

## சுற்றறிக்கை

## ஆராதனை முறை ஆண்டு
## 2025 செப்டம்பர் 20 - 2026 செப்டம்பர் 19 வரை

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவருக்குள் அன்பான இறைமக்களே,*

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை 2030-ம் ஆண்டு மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவை கொண்டாட தன்னை தயார் படுத்திக் கொண்டிருக்கிறது. இத்தருணத்தில் 2025 செப்டம்பர் 20 முதல் 2026 செப்டம்பர் 19 வரை உள்ள ஓராண்டு காலத்தை ஆராதனை முறை ஆண்டாக கொண்டாட திருச்சபை நம்மை அழைக்கிறது.

இறைவார்த்தை ஆண்டில், ஆண்டவர் இயேசுவை இறை வார்த்தையின் ஒளியில் அறிந்து கொள்ளவும், கண்டடையவும் முயற்சித்தோம். இந்த ஆண்டு, ஆராதனை முறையை அதன் பல்வேறு கோணங்களில் அறிந்து கொள்ளவும், ஆராதனை வாயிலாக ஆண்டவரை அனுபவமாக்கவும் முயற்சிப்போம். “ஆவியிலும், உண்மையிலும் ஆண்டவரை ஆராதிப்போம்” (யோவா 4:23), எனும் விருதுவாக்கை மையமாகக் கொண்டு ஆராதனை முறை ஆண்டின், செயல் திட்டமும், வழிகாட்டு நெறிகளும் தயார் செய்யப்பட்டுள்ளது.

### 1. ஆராதனை முறை ஆண்டின் நோக்கம்

மலங்கரை திருஅவையின் ஆராதனை முறை அத்திருச்சபையின் தாண்மையின் (Identity) அடித்தள உண்மைகளை வெளிப்

படுத்துகின்றது. இத்திருச்சபையின் ஆன்மீக வாழ்க்கை முறை, ஆராதனை முறையை மையமாக கொண்டுள்ளது. ஆராதனை முறை சார்ந்த ஆன்மீக வாழ்வு ஆண்டவரை ஆழமாக அனுபவித்து அறியவும், அவரது சாயலில் வளரவும் துணை நிற்கும். இந்த பின்புலத்தில் ஆராதனை முறை ஆண்டில் அருளடையாளங்களின், குறிப்பாக திருப்பலி, ஒப்புரவு, திருமுழுக்கு, மூறோன் அபிஷேகம், நோயில் பூசுதல் (திருமணம் எனும் அருளடையாளங்களைக் குறித்து குடும்ப அளவிலும், குருத்துவத்தை குறித்து குருத்துவ ஆண்டில் ஆய்வு செய்வோம்) வேளை செபங்கள், நோன்பு கால ஒறுத்தல்கள் மற்றும் உபவாசங்கள், ஆண்டவரின் திருநாட்கள் போன்றவற்றை குறித்து இறைமக்கள் சமூகத்திற்கு தெளிவான அறிவும், செயல்பாட்டு பங்கேற்பும், அனுபவங்களும் வழங்குவதை ஆராதனை முறை ஆண்டு இலட்சியமாகக் கொண்டுள்ளது.

**2. செயல் திட்டங்களின் அடிப்படை**

i) மலங்கரை ஆராதனை முறை குறித்து மக்களை அறியச் செய்தல்

ii) திருப்பலியை குறித்து மக்களை அறியச் செய்தல்

iii) ஒப்புரவு அருளடையாளத்தை குறித்து அறிவூட்டி, ஒப்புரவு எடுத்துக் கொள்ள வாய்ப்பு வழங்குதல்

iv) வேளை செபங்கள், நோன்பு, ஒறுத்தல்கள், உபவாசம், கடன் திருநாட்கள் போன்றவற்றை குறித்து விழிப்புணர்வு வழங்குதல்

v) திருத்தூயகப்பணியாளர்களுக்கான பயிற்சி அளித்தல்

vi) திருமுழுக்கு, உறுதிபூசுதல், நோயில் பூசுதல் போன்றவற்றை குறித்து விளக்கமளித்தல்

vii) புதுநன்மை பிள்ளைகளுக்கு தகுந்த பயிற்சியளித்தல்

**3. ஆராதனை முறை ஆண்டு துவக்கம்**

i) 2025 செப்டம்பர் 20-ம் நாள் சனிக்கிழமை பத்தினம்திட்டையில் நடைபெறும் மறுவொன்றிப்பு ஆண்டுவிழா திடலில் வைத்து ஆராதனை முறை ஆண்டு துவங்கி வைக்கப்படும்.

ii) 2025 செப்டம்பர் 28-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை எல்லா பங்குகளிலும், மறைபணி தளங்களிலும், ஆராதனை முறை ஆண்டு துவங்கி வைக்கப்படும்

iii) மறைமாவட்ட அளவில், வசதிக்கேற்ப ஆராதனை முறை ஆண்டு தொடக்க விழாவை நடத்தலாம்.



**4. ஆராதனை முறை ஆண்டு பங்களவில்**

2025 செப்டம்பர் 20-ம் நாள் ஆராதனை முறை ஆண்டு ஆரம்பமாகின்றது. செப்டம்பர் 28-ம் நாள் பங்களவில் இது ஆரம்பிக்கப்பட வேண்டும். காலை செபத்திற்குப் பின் ஆலயத்தின் முக்கிய வாசலிலிருந்து, சிவப்பு நிற திருவுடை (ஊறாறா) கட்டிய சிலுவையை குருவானவர் ஏந்தி வர, இருப்பக்கங்களிலும் எரிகின்ற மெழுகுவர்த்தி, மர்பஹாசா, தூபம் போன்றவற்றுடன், செப மேசைக்கு பவனியாக வருகின்றனர். செப மேசையில் வைக்கப்பட்டிருக்கும் 7 மெழுகுவர்த்திகளின் மத்தியில் இத்திருச்சிலுவை நிறுவ வேண்டும்.

பின்னர், சிலுவையின் முன் வைக்கப்பட்டுள்ள மெழுகுவர்த்தியை பங்கு தந்தையும், இடது பக்கமுள்ள மெழுகுவர்த்தியை பங்குபணியில் ஈடுபட்டிருக்கும் அருட்சகோதரியோ, (தகுந்த ஒரு நபர்), பொருளர், MCA, MCMF, MCYM, MCCL ஆகிய இயக்கங்களின் பங்குகள் தலைவர்கள், மெழுகுவர்த்திகளை எரிய செய்து ஆராதனை முறை ஆண்டை தொடங்கி வைக்கின்றனர். தொடர்ந்து விவிலியத்திலிருந்து புனித யோவான் நற்செய்தி 4-ம் அதிகாரம் 19 முதல் 26 வரையுள்ள இறைவார்த்தைகள் வாசித்து, ஆராதனை முறை ஆண்டு செபம் சொல்லப்படுகிறது. பின்னர், ஆராதனை முறை ஆண்டை குறித்து சிற்றுரை வழங்கி, திருப்பலி ஆரம்பிக்கப்படுகிறது.

i) ஆராதனை முறை ஆண்டில் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மதியம் வரை அல்லது மதியத்திற்கு பின் மாலை வரை எல்லா பங்குகளிலும், ஒப்புரவு அருளடையாளத்தை குறித்து வகுப்புகள் நடத்தி, தயாரிப்பு சடங்கு ஒழுங்குபடுத்தி ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்பட வேண்டும்.

ii) எல்லா பங்குகளிலும் ஒரு ஞாயிற்றுக்கிழைமை திருப்பலிக்கு முன் ஒரு மணி நேர வகுப்பு நடத்தி, தொடர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுக்க வேண்டும்.

iii) மற்றொரு ஞாயிறு, திருப்பலியுடன் திருமுழுக்கு கொண்டாட்டம் நடத்தப்பட வேண்டும். அன்று திருமுழுக்கை குறித்து அருளுரை வழங்க வேண்டும். அனைத்து இறைமக்களும் திருமுழுக்கிலும், திருப்பலியிலும் பங்கேற்க வேண்டும்.

iv) எல்லா பங்குகளிலும், ஒரு ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்டு, எல்லா நோயாளிகளுக்கும் நோயில் பூசுதல் அருளடையாளம் வழங்க வேண்டும்.

v) MCYM, MCA, MCMF, MCCL போன்ற இயக்கங்களின் உறுப்பினர்களுக்கு ஆராதனை முறைப்பற்றி பங்களவில் சிறப்பு பயிற்சி வழங்க வேண்டும்.

vi) எல்லா பங்குகளிலும் நம்பிக்கையாளர்கள் பங்கேற்கும் வண்ணம் சனிக்கிழமை மாலையில் மாலை செபம் சிறப்பாக நடத்த வேண்டும்.

**5. ஆராதனை முறை ஆண்டு குடும்பங்களில்**

2025-ம் ஆண்டு செப்டம்பர் 28-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை வீடுகளில் பிரதிஷ்டை செய்திருக்கும் சிலுவை, திருவிவிலியம் இவற்றிற்கு முன் ஏழு மெழுகுவர்த்திகள் ஒழுங்குபடுத்த வேண்டும். குடும்ப தலைவர், தலைவி, பிறர் என்ற வரிசையில் ஒளி ஏற்றி



ஆராதனை முறை ஆண்டு குடும்பத்தில் தொடங்க வேண்டும். தொடர்ந்து புனித யோவான் நற்செய்தி 4:19-28 வரையுள்ள இறைவார்த்தைகளை வாசிக்க வேண்டும். தொடர்ந்து ஆராதனை முறை ஆண்டு செபம் மற்றும் மாலை செபம் நடத்தி, குடும்பங்களில் இவ்வாண்டை தொடங்கி வைக்க வேண்டும்.

ஆராதனை முறை ஆண்டில் குடும்ப செபம், நோன்பு, ஒறுத்தல், உபவாசம் போன்றவற்றை மக்கள் மனமுவந்து கடைபிடிக்க அறிவுறுத்த வேண்டும்.

**6. ஆராதனை முறை ஆண்டு மறைவட்ட அளவில்**

1. ஒவ்வொரு மறைவட்டத்திலும் MCYM, MCA, MCMF, MCCL செயற்குழு உறுப்பினர்களுக்கு ஆராதனை முறை ஆண்டை மையமாக வைத்து பயிற்சிகள் வழங்க வேண்டும்.
2. ஒவ்வொரு மறைவட்டத்திலும் திருத்தூயக பணியாளர்களுக்கு பயிற்சி வழங்க வேண்டும்.
3. மறைவட்ட அளவில் கடந்த மூன்று ஆண்டுகளில் புதுநன்மை பயின்று கொண்ட பிள்ளைகளுக்கு புதுப்பித்தல் பயிற்சி வழங்க வேண்டும்.

**7. குருக்கள், துறவிகள், குரு மாணவர்களுக்கான பயிற்சி**

மலங்கரை திருஅவையின் குருக்கள், துறவிகள், குருமாணவர் களுக்கு ஆராதனை முறை ஆண்டை முன்னிட்டு பல்வேறு பயிற்சிகள் ஒழுங்குப்படுத்தப்படும்.

**8. ஆராதனை முறை கல்வி நேரலையில்**

ஆராதனை முறை குறித்து, மலங்கரை கத்தோலிக்க தொலைக்காட்சி சார்பாக 50 வகுப்புகள் அடங்கிய தொடர் ஒன்று தொடங்கி நடத்தப்படும். பங்களவில் தேர்வு நடத்தி சான்றிதழ் வழங்கப்படும்.

### 9. நடைமுறை வழிகாட்டுதல்கள்

எல்லா மறைமாவட்டங்களிலும், ஆராதனை முறை ஆண்டிற்கு இயக்குநர் நியமிக்கப்பட வேண்டும். எல்லா மறைவட்டங்களிலும் மறைவட்ட இயக்குநர், நிகழ்ச்சிகளை தலைமை ஏற்று ஒழுங்குபடுத்த வேண்டும்.

மறைவட்டங்களிலிருந்து ஒரு துறவியையும், பொதுநிலையினர் பிரதிநிதியை தேர்ந்தெடுக்க வேண்டும். பங்குகளில், ஆராதனை முறை ஆண்டு இலச்சினையை (Emblem) உள்ளடக்கிய விளம்பர Banner ஆலயத்தின் கெஸ்துறுமாவில் நிறுவ வேண்டும்.

இறைவார்த்தை ஆண்டின் தொடர்ச்சியாகிய ஆராதனை முறை ஆண்டின் செயல்பாடுகளில் பங்கு தந்தையர்கள், பங்கு மக்கள் அனைவரும் இணைந்து செயல்பட்டு அனைத்தும் ஒரு ஆசீராக மாற்ற வேண்டுமென்று அன்புடன் அறிவுறுத்துகிறேன். வேளை செபங்கள், நோன்பு, ஒறுத்தல், உபவாசம் போன்றவற்றை அதிக ஆர்வத்துடனும், பக்தியுடனும் கடைபிடிப்போம். மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவை காண நம்மையே புனிதப்படுத்திக் கொள்வோம். ஒரு புது அர்ப்பணத்திற்காக தயாராவோம். இறையனுபவத்திற்காக செபத்துடன் ஆயத்தமாவோம். திருச்சபையின் ஆராதனை முறை வழியாக, திருவழிப்பாட்டில் பங்கேற்பு அதிகரித்து இறையனுபவத்தில் வளர இயலட்டும் என இறைவேண்டல் செய்கின்றேன்.

இவண்,
இறைவனில் உங்கள் எளிய ஊழியன்,

+Baselios Cleemis

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
உயர் பேராயர் மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் காதோலிக்கோஸ்

காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்



## 95-வது மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும் சபை சங்கமமும்

மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் 95-வது மறுவொன்றிப்பு ஆண்டுவிழா மற்றும் சபை சங்கமம் செப்டம்பர் மாதம் 16 முதல் 20 வரையுள்ள தேதிகளில் பத்தனம்திட்டை மறைமாவட்டம், அடூர், ஆல் செயின்ட்ஸ் பள்ளிக்கூட வளாகத்தில் (மார் இவானியோஸ் நகர்) வைத்து கொண்டாடப்பட்டது. பாதயாத்திரிகர்களுக்கு வரவேற்பு, இசை இரவு, நற்செய்திப் பெருவிழா, பக்த இயக்கங்களின் சங்கமம், நீசேயா திருச்சங்கத்தின் 1700 -வது ஆண்டுவிழா பொதுக்கூட்டம், ஆடம்பர கூட்டுத்திருப்பலி, திருவழிபாட்டு ஆண்டு துவக்க விழா, வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் ஆயர் திருநிலைப்பாட்டின் நூற்றாண்டு விழா நிறைவு போன்ற நிகழ்வுகள் கோலாகலமாக கொண்டாடப்பட்டன. இம்மறுவொன்றிப்பு ஆண்டுவிழா கொண்டட்டங்களில் அனைத்து பணித்தளங்களி லிருந்தும் ஏராளமான இறைமக்கள், கோர் எப்பிஸ்கோப்பாமார்கள், ரம்பான்மார்கள், அருட்தந்தையர்கள், திருத்தொண்டர்கள், துறவறத்தார்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மறைபரப்பு தளச் செய்திகள்

- தேனி Nano Club சார்பாக தூய தைநேசி மாதா மலங்கரை கத்தோலிக்க ஆலயம், தேவதானப்பட்டியில் Laudato si திட்டத்தின் கீழ் மரங்கள் நடும் பணியானது தொடங்கப்பட்டது.
- **IHT - Individual Housing Toilets**
  சுத்தம், சுகாதாரம், சுய வாழ்வு என்னும் மையக்கருத்துக்கு செயல் வடிவம் கொடுக்கும் விதமாக தூய தைநேசி மாதா ஆலயத்தின் சார்பாக சுமார் 14 குடும்பங்களுக்கு கழிவறை கட்டிக் கொடுக்கப்பட்டது.

# குருமடச் செய்திகள்

- ❖ 2025 செப்டம்பர் 1-ஆம் தேதி அன்று ஓணப் பண்டிகை கோலாகலமாக குருமடத்தில் கொண்டாடப்பட்டது..
- ❖ செப்டம்பர் 2-ஆம் தேதி அன்று அருட்சகோதரர்கள் விடுமுறைக்காக தங்களுடைய இல்லங்களுக்கு சென்றனர். பின்னர் செப்டம்பர் 9-ஆம் தேதியன்று குருமடத்திற்கு வருகை தந்தார்கள்.
- ❖ செப்டம்பர் 20-ஆம் தேதியன்று பத்தனம்திட்டை மறைமாவட்டத்தில் வைத்து நடத்தப்பட்ட மறுஒன்றிப்பு தின நிகழ்வுகளில் குரு மாணவர்கள் சிறப்பாக பங்கெடுத்தார்கள்.
- ❖ செப்டம்பர் 21-ஆம் தேதியன்று மறைமாவட்ட ஆயர் குரு மாணவர்களை சந்தித்து சிறந்த அறிவுரைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கினார்.
- ❖ செப்டம்பர் 27 சனிக்கிழமை அன்று மாதாந்திர தியானம் நடைபெற்றது. அருட்தந்தை ஜோஸ். ஜி அவர்கள் தியானத்தை வழிநடத்தினார்.
- ❖ செப்டம்பர் 28-ஆம் நாளன்று மறைமாவட்ட அளவில் நடைபெற்ற திருவழிபாட்டு ஆண்டு துவக்கவிழாவில் அருட்சகோதரர்கள் கலந்துக்கொண்டனர். அன்றைய தினம் மாலையில் குருமடத்தில் திருவழிபாட்டு ஆண்டு துவக்க நிகழ்வுகள் அதிபர் தந்தை மற்றும் துணை அதிபர் தந்தை தலைமையில் நடைபெற்றது.



# மேரி மக்கள் துறவற சபை


அருட்சகோதரி **மெலனி டி.எம்** (88)

மேரி மக்கள் (DM) துறவற சபையில் புனித சூசையப்பர் மாகாண உறுப்பினரான அருட்சகோதரி மெலனி டி.எம் அவர்கள் செப்டம்பர் மாதம் 25-ம் தேதி இறைவனடி சேர்ந்தார்.

அருட்சகோதரி மெலனி டி.எம் அவர்கள், பாலா மறைமாவட்டம், கடனாடு பங்கில் கிழக்கே கரை வீட்டில் காலம் சென்ற திரு. ஜாண் திருமதி.மேரி தம்பதியினரின் மூத்த மகள். அருட்சகோதரி அவர்கள், மார்த்தாண்டம், அஞ்சல், பனச்சமூடு, கல்லுவாதில்கல், கோநி, கிராத்தூர், ஜெர்மனி, குடப்பனகுந்நு, ஆற்றூர், களியல், கன்னியாகுமரி போன்ற மடங்களில் துறவற இல்ல தலைமை அருட்சகோதரியாகவும், செவிலியராகவும் மறைபரப்பு பணியாளராகவும், இருந்து செயல்பட்டார்கள். இவரின் உடன் பிறந்தோர் 5 சகோதரர்களும், 5 சகோதரிகளும் உள்ளனர். அருட்சகோதரி அவர்களின் கல்லறை அடக்கம் 27.09.2025 சனிக்கிழமை மதியம் 2.00 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மார்த்தாண்டம் மேரி மக்கள் மாகாண இல்ல கல்லறை தோட்டத்தில் வைத்து நடைபெற்றது.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## வழிகாட்டுதல் பயிற்சி

குடும்ப வளர்ச்சி திட்டத்தின் வழியாக தற்போது 439 குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன. அவர்களில் 290 பயனாளிகளுக்கு 22.09.2025 மற்றும் 26.09.2025 ஆகிய இரண்டு தினங்கள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து வழிகாட்டுதல் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்து திட்டத்தின் நோக்கம் மற்றும் வழிமுறைகள் குறித்தும், பயனாளிகள் திட்டத்திற்கு தகுந்த ஒத்துழைப்பு எவ்வாறு நல்கவேண்டும் என்றும் விளக்கி கூறினார்கள். தொடர்ந்து திட்டஅலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் குடும்ப வளர்ச்சி திட்டம் துவங்க காரணம் மற்றும் அதை துவங்கியவர் குறித்து பயனாளிகளுக்கு விளக்கமளித்தார்கள். மேலும் பயனாளிகள் தாங்கள் கடந்த ஆண்டுகளில் துவங்கிய தொழில் பற்றியும், அவற்றின் தற்போதைய நிலை மற்றும் அதன் வழியாக குடும்பத்தில் ஏற்பட்டு வரும் முன்னேற்றம் குறித்து பகிர்ந்தனர். பின்னர் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் திருமதி வினிதா மற்றும் திருமதி ஜெசிந்தா ஆகியோர் திட்டத்தில் பயனாளிகளின் முக்கியத்துவம், அவர்கள் பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறைகள், தொழில் துவங்கும் போதுகவனிக்க வேண்டியவை ஆகியவை குறித்து தெளிவாக பயனாளிகளுக்கு பயிற்சியளித்தார்கள். இந்த பயிற்சியில் மொத்தம் 278 பயனாளிகள் கலந்துகொண்டனர்.

## வான்கோழி வளர்ப்பு பயிற்சி வான்கோழி வழங்குதல்

மிட்ஸ் நிறுவனத்தில் பயன்பெற்றுவரும் பயனாளிகளுக்கு பல்வேறு விதமான பயிற்சிகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 25.08.2025 அன்று பெருவிளையில் உள்ள மிட்ஸ் மண்டல அலுவலகத்தில் வைத்து நாகர்கோவில் பணி மண்டலத்துக்குட்பட்ட மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள பயனாளிகளுக்கு வான்கோழி வளர்ப்பு பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியினைமிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்தார்கள். திரு. ஹூய்சன் ஆல்பர்ட் அவர்கள் வான்கோழி வளர்ப்பு வழிமுறைகள் குறித்து பயிற்சியளித்தார்கள். மேலும் கிராத்தூர் பகுதியை சேர்ந்த மிட்ஸ் குடும்பவளர்ச்சி திட்ட பயனாளி திருமதி மஞ்சு அவர்கள் தனது வான்கோழி வளர்ப்பு அனுபவத்தை பகிர்ந்தார்கள். பின்னர் 08.09.2025 அன்று மிட்ஸ் இயக்குநர் திட்ட அலுவலர் திட்ட ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில் ஆஸ்திரேலியா நாட்டை சேர்ந்த திரு. லீபெனட் அவர்களின் உதவியால் ஒரு குடும்பத்துக்கு 10 வான்கோழி குஞ்சுகள் வீதம் 50 குடும்பங்களுக்கு, மொத்தம் 500 வான்கோழி குஞ்சுகள் வழங்கப்பட்டன.

## உதவித்திட்டங்கள்

1. 21.08.2025 அன்று மார்த்தாண்டம் பணிமண்டலத்தின் 15 சுய உதவி குழுக்களில் உள்ள 60 உறுப்பினர்களுக்கு பல்வேறு செயல்பாடுகளுக்காக ரூபாய் 30,00,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.

2. 17.09.2025 அன்று களியக்காவிளை பணி மண்டலத்தின் 9 சுய உதவிகுழுக்களில் உள்ள 36 உறுப்பினர்களுக்கு பல்வேறு செயல்பாடுகளுக்காக ரூபாய் 18,00,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.

## பிறநிகழ்வுகள்

27.08.2025 அன்று தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டன. தாய்மார்களுக்கு திரு. ரெஞ்சித் அவர்களால் பெண்களின் உரிமைகள், சட்டங்கள், சவால்கள் குறித்த கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்தநிகழ்வுகளில் 60 மாணவர்களும் 34 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

27.08.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட 7 பயனாளிகளுக்கான வழிகாட்டுதல் கூட்டமானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் துவங்கிவைத்து உரையாற்றினார்கள். தொடர்ந்து திட்டஅலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் மிட்ஸ் நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் தளிர்கள் உலகம் திட்டத்தின் செயல்பாடுகள், வழிமுறைகள் குறித்து விளக்கமளித்தார்கள். பின்னர் அனைவருக்கும் வங்கி கணக்கு துவங்கப்பட்டு இந்த திட்டத்தில் சேர்க்கப்பட்டனர்.

28.08.2025 அன்று எழுவோம் இயக்கம் சார்பாக மிட்ஸ் மற்றும் நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச பொது மருத்துவம் மற்றும் புற்றுநோய் கண்டறிதல் முகாம் விமலபுரம் பகுதியில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமில் அந்த பகுதியை சேர்ந்த 58 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

31.08.2025 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் சார்பாக நடத்தப்பட்டுவரும் மாதாந்திர அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், தேமானூர், மரியகிரி, நாகர்காவில் ஆகிய மையங்களில் வைத்து நடைபெற்றது. இந்த தேர்வில் மொத்தம் 88 மாணவ மாணவிகள் கலந்துகொண்டு தேர்வு எழுதினர்.

18.09.2025 மற்றும் 19.09.2025 ஆகிய இரண்டு தினங்கள் அழகியமண்டபம் அன்னை ஆதாபயிற்சி மையத்தில் வைத்து விண்ணைத்தொடு திட்டத்தின் சார்பாக Gate Keeping Right Shop என்ற தலைப்பில் சிறப்பு கூட்டமானது நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் விண்ணைத்தொடு திட்ட பணியாளர்கள் மூன்று பேர் கலந்துகொண்டனர்.



# புனித வின்செண்ட் தே பவுல் சபை
## மார்த்தாண்டம் மத்திய சபை

தேசத்தோடு ஒரு நாள் தூய்மை பணி என்னும் திட்டத்தின் கீழ் மார்த்தாண்டம் மத்திய பேரவை வின்செண்ட் தே பவுல் சபையின் சார்பில் ஆறு தேசம், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தூய்மை பணியானது மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் மத்திய பேரவை மற்றும் வட்டார சபை பொறுப்பாளர்கள் வின்செந்திய சகோதர சகோதரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

வின்செண்ட் தே பவுல் சபையின் பாதுகாவலர் புனித வின்செண்ட் தே பவுல் திருநாளை முன்னிட்டு அருமனை வட்டார சபையின் சிதறால் புனித மரியன்னை கிளைச்சபையில் 18 பயனாளிகளுக்கு ரூபாய் 10000/- வீதம் தொழில் வளர்ச்சிக்கான சுழற்சி முறைத்திட்டமானது பங்குதந்தை ஜெனின் ஜெரால்டு அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பொருளர். சகோதரி கலா அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மார்த்தாண்டம் மத்திய சபை தலைவர் சகோதரர். இயேசு ராஜன் அவர்கள் கலந்து கொண்டு சுழற்ச்சி முறை திட்டத்தின் பயன்கள் பற்றி விளக்கி கூறினார். அருமனை வட்டாரசபை தலைவர் சகோதரர். அன்பு தாஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து கிளைச்சபை தலைவர் சகோதரி. கலா அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**2025 அக்டோபர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **17, 18** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

## HEALTH FOR ONE MILLION (HOM)
Diocese of Marthandam

- செப்டம்பர் மாதம் 19-ம் தேதி போதையில்லா பாதை இல்லத்தரசிகளுக்கான விழிப்புணர்வு கன்னியாகுமரியில் வைத்து நடைபெற்றது. இதில் சுமார் 15 பேர் கலந்துகொண்டனர்.
- செப்டம்பர் மாதம் 20-ம் தேதி படுக்கை நோயாளிகள் நல உதவி குழித்துறையில் வைத்து நடைபெற்றது. இதில் சுமார் 35 பேர் கலந்துகொண்டனர்.

## பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை யூஜின்
அக்டோபர் 04



அருட்தந்தை சஜித் பிரான்சிஸ்
அக்டோபர் 04



அருட்தந்தை
அஜீஷ் ஜோகன்
அக்டோபர் 22



அருட்தந்தை
வில்பிறைட்
அக்டோபர் 22



அருட்தந்தை
கிறிஸ்பின் குரு
அக்டோபர் 25



# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

**முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் [2025 - 2027] தொடக்க விழா (First year Inaugural 2025)**

நமது கல்வியியல் கல்லூரியில் 2025-2027-ம் கல்வியாண்டிற்கான முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான கல்லூரி தொடக்க விழாவானது 21.08.2025 அன்று இறைவணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. கல்லூரியின் முதல்வர் முனைவர் ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் அனைத்து பேராசிரியர்களையும் அறிமுகம் செய்து வைத்து அனைவருக்கும் வரவேற்புரை கூறினார். அதனைத் தொடர்ந்து கல்லூரியின் தாளாளர் தந்தை, அருட்தந்தை பென்னார்டு அவர்கள் தலைமை உரையாற்றினார். இறுதியாக பேராசிரியர் முனைவர். லூர்து மேரி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**ஆங்கிலத் தொடர்பு வகுப்புகள், தொடக்கவிழா (Communicative English)**

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 25.08.2025 அன்று பாட இணைப்புப் பயிற்சி தொடங்கப்பட்டது. அதில் ஆங்கில பயிற்சி வகுப்புகள் 18.09.2025 நாள் முடிய முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெறும். இந்த பயிற்சி வகுப்புகளை கல்லூரியின் தாளாளர் தந்தையுமான அருட்தந்தை பென்னார்டு அவர்கள் துவக்கி வைத்து பயிற்சியாளரை அறிமுகம் செய்தார். பயிற்சியாளர் திரு. டைட்டஸ் படித்துறைக்கல் ஸ்டீபன் அவர்கள் பதினைந்து நாட்கள் பயிற்சி வகுப்புகளை நடத்தவுள்ளார்.

மரியாயின் சேனை

# கொமித்சியச் செய்திகள்

### ✦ செயல்பாடுகள் : சாலோம் ஹோம் சந்திப்பு

பிலாங்காலை கியூரியா செல்லங்கோணம் விசுவாசத்தின் மாதா பிரசீடிய உறுப்பினர்கள் இருவர் 06.08.2025 புதன் அன்று நடைக்காவு அருகில் உள்ள வயது முதிர்ந்த படுக்கை நோயாளிகளைப் பராமரிக்கும் சாலோம் ஹோம் சென்று 40 நபர்களைச் சந்தித்து உரையாடி செபித்து வந்துள்ளனர்.

### ✦ கியூரியா புதுப்பிக்க முயற்சி

செயல்படாமல் இருக்கும் விமலபுரம் கியூரியாவை செயல்பட வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 28.09.2025 அன்று பங்குதந்தை Rev. Fr. பிபின்ஸ் வில்சன் அவர்கள் இணைந்து மீண்டும் தொடங்கி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### ✦ புதிய பிரசீடியம்

நிர்மல மாதா பாலவிளை கியூரியாவின் கீழ் புன்னமூட்டுக்கடை பங்கில் அற்புதமாதா என்ற பிரசீடியமானது 23.08.2025 அன்று அருட்தந்தை ஜீவன் ஜார்ஜ் அவர்கள் முயற்சியால் கொமித்சிய செயலர் Br. ஜெயபின் சர்மா அவர்கள் சென்று துவக்கி வைத்துள்ளார்கள்.

### ✦ பிரசீடியம் புதுப்பித்தல்

விமலபுரம் கியூரியாவின் கீழ் சேறோட்டுக்கோணம் பங்கில் கொரோனா காலத்திற்குப் பின் செயல்படாமல் இருந்த இரக்கத்தின்



மாதா பிரசீடியத்திற்கு 17.08.2025 அன்று கொமித்சிய செயலர் Br. ஜெயபின் சர்மா. உதவித்தலைவர் Br. பிபீஸ்குமார் ஆகியோர் சென்று நபர்களை சந்தித்து 24.08.2025-ல் தொடங்க ஏற்பாடு செய்தார்கள். 24.08.2025 அன்று கொமித்சிய தலைவர் Br. ஏசுராஜ் அவர்கள் சென்று பிரசீடியத்தை மீண்டும் ஆரம்பித்து வைத்துள்ளார்கள். ஆரம்பிப்பதற்கு அருள்தந்தை பிபின்ஸ் வில்சன் அவர்கள் முயற்சி மேற்கொண்டார்கள்.

### ✦ செபமாலை மாதம்

அக்டோபர் மாதம் செபமாலை மாதம் ஆகும். ஆலயங்களில் தினந்தோறும் செபமாலை செபிக்க மரியாயின் சேனையர் முயற்சிகள் மேற்கொள்ளவும். அக்டோபர் 31 சிறப்பு நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யவும்.

### ✦ செபமாலை பவனி

வழக்கம் போல இந்த ஆண்டும் மரியாயின் சேனை சார்பில் மறைமாவட்ட அளவில் செபமாலை பவனி 26.10.2025 ஞாயிறு 2.00 மணிக்கு மஞ்சாலுமூடு செயின்ட் ஆன்றணீஸ் R.C. ஆலயத்திலிருந்து ஜார்ஜிநகர் (முகலூர் புனித ஜார்ஜியார் மலங்கரைக் கத்தோலிக்க ஆலயம் வரை நடைபெற உள்ளது. பங்கு மக்களோடு இணைந்து அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

# MCA

## Diocese of Marthandam

### ❖ 95-வது மறு ஒன்றிப்பு தினம்

95-வது மறு ஒன்றிப்பு தினம் செப்டம்பர் 19, 20 ஆகிய தினங்களில் பத்தனம்திட்டை மறைமாவட்டம் அடூர் மார் ஈவானியோஸ் நகரில நடைபெற்றது. மறைமாவட்ட MCA சார்பில் இரண்டு தினங்களில் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் 55 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

### ❖ சபையளவிலான பொதுநிலையினர் சங்கமம்

மலங்கரை கத்தோலிக்க இயக்க சபையளவிலான சங்கமம் 19.09.2025 அன்று பிற்பகல் மார் இவானியோஸ் நகர், பொது அரங்கில் சபைத்தலைவர் மற்றும் MCA செயலர் ஆகியோர் முன்னிலையில் திரு. பைஜூ எஸ். ஆர் அவர்களது தலைமையில் நடைபெற்றது. மேற்படி சங்கமத்தின் நடுவில் இரண்டு புது ஆயர்களின்அறிவிப்பு வெளியிடப்பட்டது. MCA இயக்கத்திற்கு பெருமை சேர்த்த தருணமாக அமைந்தது.

### ❖ மோறான் மோர் பசேலியோஸ் வித்யா ஸ்ரீ புரஸ்கார்

சபையளவிலான MCA மற்றும் KMRM இணைந்து வழங்குகின்ற மாநில பாடத்திட்டத்தில் மறைமாவட்ட அளவில் 10-ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற ஒரு நபருக்கு வழங்குகின்ற கேடயம் மற்றும் ரூ. 10,000/- நமது மறைமாவட்ட காட்டுவிளை பங்கை சார்ந்த செல்வன். M. டினோவர் என்பவருக்கு பொதுநிலையினர் சங்கமத்தில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

### ❖ மறைபரப்பு தள மேம்பாட்டு நிதி

சபையளவிலான MCA சார்பில் மறைபரப்பு தளங்களில் ஆலயம் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டது. நமது மறைமாவட்டத்தில் களக்காடு பகுதியில் J.J. நகர் என்ற இடத்தில் ஆலயம் கட்ட ரூ. 10,000,00 (பத்து லட்சம்) அனுமதிக்கப்பட்டு முதல் தவணையாக ரூ. 1,00,000/- (ஒரு லட்சம்) -க்கான காசோலையை மறைமாவட்ட



ஆன்மீக இயக்குநர் மற்றும் மறைமாவட்ட தலைவர் ஆகியோரிடம் மாநாட்டில் வழங்கப்பட்டது. மேற்படி தொகையானது மறைமாவட்ட ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டது.

### ❖ MCA சார்பில் குருக்கள் மற்றும் அருட்கன்னியரை கௌரவித்தல் விழா

மறைமாவட்ட MCA சார்பில் மறைமாவட்டத்திற்குட்பட்ட குருக்கள் மற்றும் அனைத்து துறவற சபைகளை சார்ந்த அருட்கன்னியர்களை கௌரவிக்கும் விழா 28.09.2025 அன்று குழித்துறை மேய்ப்புப்பணி நிலைய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. மேற்படி கூட்டத்திற்கு மறைமாவட்ட தலைவர் திரு. வர்க்கீஸ் தலைமை தாங்கினர். மேதகு ஆயர் அவர்களால் சிறப்புரை மற்றும் ஆசியுரை வழங்கப்பட்டது. டாக்டர் ஷெர்லின், திரு. பால்ராஜ் மற்றும் டாக்டர். ஜெயராஜ் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள், குருக்கள் சார்பாக குருகுல முதல்வர் மோண் ஜோஸ் பிறைட் அவர்களும், கன்னியர்கள் சார்பாக மேரிமக்கள் துறவற சபை மார்த்தாண்டம் மாகாண தலைவி றோஸ் பிரான்சீஸ் அவர்களும் ஏற்புரை வழங்கினார்கள். வருகை தந்த 30-க்கு மேற்பட்ட குருக்களுக்கும், 40-க்கு மேற்பட்ட அருட்கன்னியர்களுக்கும் மேலாண்மை குழு உறுப்பினர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. முன்னதாக திரு. வினு வரவேற்புரை கூற, திரு. அருள்தாஸ் அவர்களால் நன்றியுரையும் கூறப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை ஆன்மீக இயக்குநர் மற்றும் தலைவர் ஆகியோருடன் மேலாண்மை குழு உறுப்பினர்கள் செய்தார்கள்.

### ❖ குருக்கள் நிதிய நிதி வழங்குதல்

மறைமாவட்ட MCA சார்பில் குருக்களும் பொதுநிலையினரும் ஒன்றாக இணைந்து செயல்படுகிறோம் என்பதை உறுதிப்படுத்தவும், பொதுநிலையினர்கள் துணையாக இருப்போம் என்பதை நிலை நிறுத்தவும், MCA சார்பில் ரூ. 1,00,000/- (ஒரு லட்சம்) வைப்புநிதியாக வைக்கப்பட்டு ஆயர் முன்னிலையில் அதன் செயலர் அருட்தந்தை ரதீஷ் றிச்சார்டு அவர்களிடம் தலைவர் மற்றும் ஆன்மீக இயக்குநர் ஆகியோர்களால் வழங்கப்பட்டது.

# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

**மறைமாவட்ட குருக்களுக்கான கூடுகை மற்றும் தியானம்**

மார்த்தாண்டம் மறைவட்ட குருக்களுக்கான கூடுகை 07.09.2025 செவ்வாய்கிழமை சிதறால் பங்கில் வைத்து மறைவட்ட முதன்மை குரு Msgr. ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் ஆரம்பமானது. அருட்தந்தை ஜெனன் ஜெரால்டு தியான உரை வழங்கினார்கள்.

ஜூலை மாதம் 20-ம் தேதி மறைவட்ட தாய்மார் சங்க தினம் தேமானூர் பங்கில் வைத்த நடைபெற்றது.

ஜூலை மாதம் 28-ம் தேதி பேராலயத்தில் வைத்து மறைவட்ட அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகளுக்கான கூடுகை நடைபெற்றது.

இளையோர் இயக்கம் சார்பாக ஆகஸ்ட் மாதம் 27-ம் தேதி மறைவட்ட அளவிலான போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டது.

ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி கண்ணக்கோடு பங்கில் வைத்து இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு தொடர் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. முனைவர் டார்பெல்லோ கிறிஸ்டஸ் அவர்கள் வகுப்பை நடத்தினார்கள்.

அக்டோபர் மாதம் 2-ம் தேதி மறைக்கல்வி பிள்ளைகளுக்கான மறைவட்ட அளவிலான கலைப்போட்டி MJKM பள்ளிக்கூடத்தில் வைத்து நடத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் அனைத்து இயக்கங்களுடைய இயக்குநர் தந்தையர்கள் தங்கள் இயக்கங்களுடைய வரப்போகும் நிகழ்வுகளை தெரிவித்து அதைப்பற்றிய கருத்துக்களும் ஆலோசிக்கப்பட்டது. தொடர்ந்து கடைசி ஜெபத்துடன் கூட்டம் முடிவடைந்தது.



## களியக்காவிளை மறைவட்டம்

❖ புனித யூதா ததேயு கிளைசபை ஆதிச்சவிளாகம் சார்பில் திருப்பலி சிறப்பித்து நல திட்டங்கள் வழங்கப்பட்டது. புனித யூதா ததேயு கிளைசபை ஆதிச்சவிளாகம் சார்பில் ரூ. 85000/- மதிப்பில் வீடு பராமரிப்பு செய்து கொடுக்கப்பட்டது. மத்திய சபை கூட்டம் பாலவிளை பங்கில் வைத்து நடைபெற்றது.

❖ செப்டம்பர் மாதம் 13 & 14 ஆகிய நாட்களில் விவிலிய ஆண்டின் நிறைவாக களியாக்காவிளை மறைவட்ட கன்வென்ஷன் நடைக்காவு பங்கில் வைத்து நடைபெற்றது. அருப்பணி ஸ்தனிஸ்லாஸ் அவர்கள் கன்வென்ஷனை வழிநடத்தினார்கள்.

## அழகியமண்டபம் மறைவட்டம்

❖ அழகியமண்டபம் மறைவட்ட குருக்களினுடைய மாதாந்திர தியானம் மற்றும் கூடுகை மறைவட்ட அளவில் 22-ம் தேதி அன்று பிலங்காலை பங்கில் வைத்து நடைபெற்றது

## நாகர்கோவில் மறைவட்டம்

❖ நாகர்கோவில் மறைவட்ட குருக்களின் மாதாந்திர கூடுகை மற்றும் செப்டம்பர் மாத தியானமானது 09.09.2025 அன்று மந்தாரம்புதூர், கருணை இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இம்மாத தியான உரையை, "கடவுளின் மீட்பு செயலுக்கு பெண் தேவையா?, மரியா பாவமற்றவளா? இயேசு பிறக்க பாவமற்ற பெண் கட்டாயமா?" என்ற கேள்விகளை முன்வைத்து, விவிலிய பின்னணியில் பதில் தந்து

அருட்தந்தை அபின்சன் அவர்கள் வழங்கினார்கள். தொடர்ந்து மறைவட்ட குருக்களின் பணிப்பொறுப்புகளின் அனுபவ பகிர்வு மற்றும் மறைமாவட்ட பொது அறிவிப்புகள் வழங்கப்பட்டு கூடுகை இனிதே நிறைவுற்றது.

## கொல்லங்கோடு மறைவட்டம்

கொல்லங்கோடு மறைவட்டம் சார்பாக அட்டப்பாடி நற்செய்திக் குழு முன்னின்று நடத்திய அக்னி அபிஷேக நற்செய்திப் பெருவிழா செப்டம்பர் மாதம் 26,27,28 ஆகிய நாட்களில் மஞ்சதோப்பு ஆலய வளாகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இதில் சுமார் 1800 நபர்களுக்கு மேல் கலந்துக்கொண்டு இறையாசீர் பெற்றனர். இறுதி நாளில் மேதகு ஆயர் அவர்கள் கலந்துக்கொண்டு ஆசியுரை வழங்கினார்.

கொல்லங்கோடு மறைவட்டத்தின் திருவழிபாட்டு ஆண்டின் துவக்க விழாவானது செப்டம்பர் மாதம் 28ம் தேதி மஞ்சத்தோப்பு ஆலயத்தில் வைத்து மேதகு ஆயர் வின்செென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது.

கொல்லங்கோடு மறைவட்டத்தின் குருக்கள் மன்ற கூடுகையானது பின்குளம் குருக்கள் இல்லத்தில் வைத்து செப்டம்பர் மாதம் 18ம் நாள் காலை 11.30 மணிக்கு நற்கருணை ஆராதனையுடன் ஆரம்பமாகி பல்வேறு வகை கருத்து பரிமாற்றங்களுடன் பிற்பகல் 2 மணிக்கு நிறைவடைந்தது.



## ஆயரின் செப்டம்பர் மாத நிகழ்வுகள்



- 5 ➢ வெட்டிக்குழி தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுப்பிக்கப்பட்ட குருசடியை திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.
- 6 ➢ ஆலப்புழை புளிகுந்நு புனித மரியன்னை பேராலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- 7 ➢ கோணம் புனித மரியன்னை தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி ஆசீர்வதித்தார்.
- 7 ➢ குற்றியாவிளை CSI ஆலயத்தில் குடும்ப விழாவிற்கு தலைமை தாங்கி நூலகத்தையும் திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.
- 7 ➢ பல்லுக்குழி அன்னை நகர் தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றினார்.
- 8 ➢ சுருளோடு புனித மரியன்னை திருத்தலத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி பக்தர்களை ஆசீர்வதித்தார்.
- 12 ➢ அருட்தந்தை ஜெறோம் பீடிக்கப்பறம்பில் OIC அவர்களின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி திருச்சடங்கு நிறைவேற்றினார்.
- 13 ➢ மரியாகிரியில் வைத்து நடைபெற்ற MCMF தினவிழாவில் தலைமையேற்று ஆசியுரை வழங்கினார்.
- 13 ➢ நடைக்காவில் வைத்து நடைபெற்ற களியக்காவிளை மறைவட்ட நற்செய்தி பெருவிழாவினை துவங்கி வைத்தார்.
- 14 ➢ நாவல்காடு தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றினர்.

14 ➢ பனச்சமூடு தேவாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அரங்கத்தை அர்ச்சித்து திறந்து வைத்தார்.

18 ➢ நட்டாலத்தில் புதுமனையை திறந்துவைத்து அர்ச்சித்தார்.

19-20 ➢ பத்தனம்திட்டை மறைமாவட்டத்தில் வைத்து நடைபெற்ற மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவையின் 95-வது சபை சங்கமத்தில் கலந்து கொண்டார்.

21 ➢ சூரியகோடு தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மையும் வழங்கி ஆசீர்வதித்தார்.

27 ➢ துவையூரில் அருட்தந்தை சாங்கியத் அவர்களின் குருத்துவ வெள்ளிவிழா நிகழ்வில் கலந்து கொண்டார்.

28 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் திருவழிபாட்டு ஆண்டினை துவங்கி வைத்து ஆசியுரை வழங்கினார்.

28 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA சார்பாக குழித்துறை மார் எப்ரேம் வளாகத்தில் வைத்து நடைபெற்ற குருக்கள் மற்றும் அருட்சகோதரிகளை கௌரவிக்கும் விழாவில் கலந்துகொண்டு ஆசீர்வதித்தார்.

28 ➢ மஞ்சத்தோப்பில் வைத்து நடைபெற்ற கொல்லங்கோடு மறைவட்ட நற்செய்தி பெருவிழாவில் கலந்துகொண்டு கொல்லங்கோடு மறைவட்ட திருவழிபாட்டு ஆண்டினை துவங்கி வைத்தார்.

29 ➢ நடைக்காவு தேவாலயத்தில் திருமண அருளடையாளத்தை நிறைவேற்றினார்.

30 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் கன்னியர் இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.



## இம்மாதம் நினைவு கூர

அக்டோபர் 2025


1 – புனித குழந்தை தெரசாள்
2 – காவல் தூதர்கள்
3 – அரியோபாக்கஸ் மார் திவன்னாசியோஸ்
4 – புனித பிரான்சிஸ் அசிசி, மார் துமாத்தியோஸ்
5 – சிலுவைத் திருநாளுக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
புனித பௌஸ்தினா
மலங்கரை கத்தோலிக்க இளைஞர் தினம்
7 – ஜெபமாலைத் திருநாள்
மார் சர்க்கீசும் மார் பாக்கோசும்
9 – குலத்தந்தையான ஆபிரகாம்
10 – பேராயர் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் ஆண்டகையின் நினைவு
இறைவாக்கினர் தானியேல்
11 – திருத்தொண்டர் மார் பிப்பு
திருத்தந்தை புனித 23-ாம் யோவான்
12 – சிலுவைத் திருநாளுக்குப்பின் நான்காம் ஞாயிறு
13 – மார் கார்ப்போஸ்
15 – ஆவிலாவின் புனித தெரசா
18 – நற்செய்தியாளர் புனித லூக்கா
19 – சிலுவைத் திருநாளுக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
மறைபரப்பு ஞாயிறு
20 – இறைவாக்கினர் யோவேல்
22 – மார் ஹிலாரியோன்
புனித இரண்டாம் யோவான் பவுல் திருத்தந்தை
23 – அல்பேயுவின் மகன் மார் யாக்கோபு
26 – சிலுவைத் திருநாளுக்குப்பின் ஆறாம் ஞாயிறு
28 – பெத்தேரி மறைமாவட்டம் நிறுவப்பட்ட நாள்


1


4


7


10


18


23


## 95-வது மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும் சபை சங்கமமும்



## குருமட செய்திகள்



## மறைபரப்பு தளச் செய்திகள்



## புனித வின்சென்ட் தே பவுல்



## Health for One Million




## மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி, கிராத்தூர்



## MCA




## மறைவட்ட செய்திகள்

